# கல்லூரி விதிமுறை

1. மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் பாட வகுப்புகள் “ஏ” “பி” என இருபிரிவாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு நாளைக்கு 6 பாட வேளைகள் நடைபெறும்.
2. காலை மதியம் வகுப்புகள் தொடங்குவதற்கு 5 நிமிடத்திற்கு முன் முதல் மணியும், தொடங்கும் நேரத்தில் இரண்டாவது மணியும் அடிக்கப்படும்.

    காலை : 9.45 - 12.40

    மதியம் : 12.40 – 1.10 (உணவு இடைவேளை)

    மாலை : 1.10 – 3.45 ிஅ

3. வருகை:

- கல்லூரிக்கு குறித்த நேரத்தில் வருதல் வேண்டும்.
- மாணவர் வருகைபதிவேடு ஒவ்வொரு பாடவேளைக்கு எடுக்கப்படும்.
- மாணவர் விடுமுறை எடுக்கும் நாளின் முந்தைய நாளில் வகுப்பாசிரியர் மற்றும் முதல்வர் ஒப்புதல் பெற வேண்டும்.
- மாணவர் எவ்வித முன் அறிவிப்பின்றி ஒரு மணிநேரமோ, அரைநாளோ, அல்லது ஒரு நாளோ எடுக்கப்படும் விடுப்புக்கு தகுந்த காரணத்தை தெரிவித்து பெற்றொர் ஒப்பமிட்ட கடிதம் சமா்ப்பிக்க வேண்டும்.
- தேவையான வருகை நாட்களுக்கும் குறைவாக வரும் மாணவர்கள் பல்கலைக்கழக இறுதித் தேர்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- அனுமதியின்றி, தகுந்த காரணமின்றி தொடர்ந்து மூன்று நாட்கள் கல்லூரிக்கு வராவிட்டால், பெயர் நீக்கம் செய்யப்படும்.

4. மாணவர் நடத்தை

- இக்கல்லூரியானது, சிறந்த ஆசிரியர்களை உருவாக்கும் ஒரு கல்வியியல் நிறுவனம். இங்கு பயிலும் மாணவர்கள் தாய்நாட்டின், பண்பாடு கலாச்சாரம், தேசீய ஒருமைப்பாட்டினை பேணிக் காக்க வேண்டும்.
- மாணவர்களது பேச்சு, மற்றும் செயல்கள் கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைய வேண்டும்.
- கல்லூரிக்கு களங்கம் விளைவிக்கும் எச்செயலிலும் மற்றும் மாணவர்களின் கேலிவதை ஆகியவைகளும் தடைச்செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளவும்.
- மாணவர்கள் தவறாமல் சீருடை அடையாள அட்டை அணிந்து வரவும்.
- கல்லூரி வளாகங்களில் தேவையில்லாமல் சுற்றுவது, சுற்றுச்சூழலை குப்பயையாக்குவது, சுவற்றில் எழுதுவது, நூலகத்தில் பிறருக்கு இடையூறு அளிக்கும் வகையில் பேசுவது, அனுமதி இன்றி வகுப்பறையை விட்டு செல்வது ஆகிய செயல்களை முழுவதும் தவிர்க்கவும்.
- கல்லூரியில் மாணவர்களை செல்போன்களை உபயோகிக்க முழுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.
- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
- மாணவர்களின் வேண்டுகோள்கள், முறையீடுகள் போன்றவை ஆசிரியர் குழு மூலமாக முதல்வரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- முதல்வர் அனுமதியின்றி மாணவர்கள் கல்லூரி நிகழ்வுகள் மற்றும் விழாக்கள் குறித்த அழைப்பிதழ்கள் அச்சிடக்கூடாது.

5. <u>பெற்றோர்.ஃ.பாதுகாவலர் கவனத்திற்கு:</u>

- பெற்றோர்.ஃ.பாதுகாவலர் மாணவர்கள் கல்வி பயிலும் நிலை குறித்து அடிக்கடி கல்லூரி முதல்வர் அவர்களை நேரில் அணுகி தெரிந்துக்கொள்ளவும்.
- கட்டணத் தொகையை தாங்களே உரிய தருணத்தில் செலுத்தவும்.

- மாணவர்களது நடத்தை திருப்தி அளிக்காவிட்டால் கல்லூரி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

6. கல்லூரி மன்றங்கள்:

கல்லூரியின் ஒவ்வொரு பாடப்பிரிவு மாணவர்களுக்கும் கல்லூரி மன்றங்கள் உருவாக்கப்படும்.

- தமிழ்பாட மன்றம்
- ஆங்கிலப் பாட மன்றம்
- கணிதப்பாட மன்றம்
- இயற் அறிவியல் பாட மன்றம்
- உயிர் அறிவியல் பாட மன்றம்
- வரலாறு பாட மன்றம்
- பொருளாதாரப் பாட மன்றம்
- வணிகவியல் பாட மன்றம்
- கணினி கல்விப் பாட மன்றம்.

இதில் மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக கலந்துக்கொண்டு கல்வித் திறனையும் பல்வேறு பயிற்சிகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

7. நூலக விதிமுறைகள்:

1. கல்லூாயில் பயிலும் மாணவர்கள் பணிபுரியும் பேராசிரியர்கள் ஆகிய அனைவரும் நூலகத்தின் உறுப்பினர்கள் ஆவர்.
2. நூலகம் காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை திறந்திருக்கும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமையில் மாணவர்கள் ஓய்வு நேரத்திலும், நூலக வகுப்பு நேரத்திலும் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. மாணவ உறுப்பினர்களுக்கு இரண்டு நூலக அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

4. ஒரு அடையாள அட்டைக்கு ஒரு புத்தகம் மட்டும் வழங்கப்படும்.
5. நூலக அடையாள அட்டையின் பேரில் உறுப்பினர் யாவரும் புத்தகங்கள் பெற உரிமை உடையவராவர். வெளி ஆட்களுக்காக நூலகப் புத்தகங்கள் பெறுதல் கூடாது.
6. மாணவ உறுப்பினர்கள் புத்தகங்களைப் பெறும்போது அடையாள அட்டையுடன் நூலக அட்டை காண்பித்தல் வேண்டும்.
7. புத்தகங்கள் மாணவர்களுக்க 7 நாட்கள் வரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். ஆசிரியர்கள் 15 நாட்கள் வரை வைத்துக் கொள்ளலாம்.
8. தேவைப்படின், சில புத்தகங்கள் எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படும். மேற்கொள் நூல்கள், அகராதிகள், பாடநூல்கள், மாத வாரஇதழ்கள் ஆகியன வழங்கப்படமாட்டாது.
9. நூலக விதிப்படி, நூலகத்தின் நுழைவு வாயிலில் உள்ள பதிவேட்டில் அனைவரும் கையொப்பமிட்டு உள்ளே வர அனுமதிக்கப்படும்.
10. நூலகத்தினுள் சொந்த உடமைகள், புத்தகங்கள் உடைய பைகள் உறைகள், மற்ற பொருட்கள் எதையும் அனுமதிக்கப்படமாட்டாது.
11. புத்தகங்களின் உள்ளே எழுதுவது, கிறுக்குவது கண்டிப்பாக தவிர்க்கப்படல் வேண்டும்.
12. ஒவ்வொரு உறுப்பினரும், புத்தகம் மற்றும் உடைமைகளுக்கு முழுப்பொறுப்பாவர் - புத்தகம் கிழிந்த சிதிலமடைந்த நிலையில் இருந்தால் மாற்று புத்தகம் தருதல் வேண்டும்.